ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு’தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ வாயும் திரை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வாயும் திரை ॥

பிரிவாற்றாமைக்கு வருந்தல்

‡வாயும் திரை உகளும்⋆ கானல் மட நாராய்⋆
ஆயும் அமர் உலகும்⋆ துஞ்சிலும் நீ துஞ்சாயால்⋆
நோயும் பயலைமையும்⋆ மீதூர எம்மே போல்⋆
நீயும் திருமாலால்⋆ நெஞ்சம் கோட்பட்டாயே (1)

கோட்பட்ட சிந்தையையாய்க்⋆ கூர்வாய அன்றிலே⋆
சேட்பட்ட யாமங்கள்⋆ சேராதிரங்குதியால்⋆
ஆட்பட்ட எம்மே போல்⋆ நீயும் அரவணையான்⋆
தாட்பட்ட தண் துழாய்த்⋆ தாமம் காமுற்றாயே (2)

காமுற்ற கையறவோடு⋆ எல்லே இராப்பகல்⋆
நீ முற்றக் கண் துயிலாய்⋆ நெஞ்சுருகி ஏங்குதியால்⋆
தீ முற்றத் தென் இலங்கை⋆ ஊட்டினான் தாள் நயந்த⋆
யாம் உற்றதுற்றாயோ⋆ வாழி கனை கடலே (3)

கடலும் மலையும்⋆ விசும்பும் துழாய் எம் போல்⋆
சுடர் கொள் இராப்பகல்⋆ துஞ்சாயால் தண் வாடாய்⋆
அடல் கொள் படையாழி⋆ அம்மானைக் காண்பான் நீ⋆
உடலம் நோய் உற்றாயோ⋆ ஊழிதோறூழியே (4)

ஊழிதோறூழி⋆ உலகுக்கு நீர் கொண்டு⋆
தோழியரும் யாமும் போல்⋆ நீராய் நெகிழ்கின்ற⋆
வாழிய வானமே⋆ நீயும் மதுசூதன்⋆
பாழிமையில் பட்டவன் கண்⋆ பாசத்தால் நைவாயே (5)

நைவாய எம்மே போல்⋆ நாள் மதியே நீ இந்நாள்⋆
மை வான் இருள் அகற்றாய்⋆ மாழாந்து தேம்புதியால்⋆
ஐ வாய் அரவணை மேல்⋆ ஆழிப் பெருமானார்⋆
மெய் வாசகம் கேட்டு⋆ உன் மெய்ந் நீர்மை தோற்றாயே (6)

www.prapatti.com

தோற்றோம் மட நெஞ்சம்⋆ எம் பெருமான் நாரணற்கு⋆ எம்
ஆற்றாமை சொல்லி⋆ அழுவோமை நீ நடுவே⋆
வேற்றோர் வகையில்⋆ கொடிதாய் எனை ஊழி⋆
மாற்றாண்மை நிற்றியோ⋆ வாழி கனை இருளே (7)

இருளின் திணி வண்ணம்⋆ மா நீர்க் கழியே போய்⋆
மருள் உற்றிராப்பகல்⋆ துஞ்சிலும் நீ துஞ்சாயால்⋆
உருளும் சகடம்⋆ உதைத்த பெருமானார்⋆
அருளின் பெரு நசையால்⋆ ஆழாந்து நொந்தாயே (8)

நொந்தாராக் காதல் நோய்⋆ மெல் ஆவியுள் உலர்த்த⋆
நந்தா விளக்கமே⋆ நீயும் அளியத்தாய்⋆
செந்தாமரைத் தடங்கண்⋆ செங்கனி வாய் எம் பெருமான்⋆
அந்தாமத் தண் துழாய்⋆ ஆசையால் வேவாயே (9)

வேவாரா வேட்கை நோய்⋆ மெல் ஆவியுள் உலர்த்த⋆
ஓவாதிராப்பகல்⋆ உன் பாலே வீழ்த்தொழிந்தாய்⋆
மாவாய் பிளந்து⋆ மருதிடை போய் மண் அளந்த⋆
மூவா முதல்வா⋆ இனி எம்மைச் சோரேலே (10)

‡சோராத எப்பொருட்கும்⋆ ஆதியாம் சோதிக்கே⋆
ஆராத காதல்⋆ குருகூர்ச் சடகோபன்⋆
ஓர் ஆயிரம் சொன்ன⋆ அவற்றுள் இவைப் பத்தும்⋆
சோரார் விடார் கண்டீர்⋆ வைகுந்தம் திண்ணனவே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com